Deposition of Witness
(Chapter XXV BNSS )
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.
Case No. STC. No. 328/2024
DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS – 2

| | | | |
|---|---|---|---|
| Name: | சம்பத் | Calling: | சிறப்பு உதவி ஆய்வாளர் |
| Father's Name: | திருமலை | Religion: | |
| Village: | பெரியாங்குப்பம் | Age: | 56 |
| Taluk: | ஆம்பூர் | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of BSA 2023 Dated : 24.03.2026 நேரம் : 01.25 PM

( எதிரிகள் ஆஜர். )

அ.சா. 2 முதன்மை விசாரணை

நான் தற்போது வாணியம்பாடி கிராமிய காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 17.04.2022 ம் தேதி அம்பலூர் காவல் நிலையத்தில் நிலைய அலுவலில் இருந்தபோது வாணியம்பாடி அரசு மருத்துவமனையில் வந்த இன்டிமேசனை பெற்று அங்கு சென்று உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த கனகராஜ் என்பவரை விசாரித்து புகார் வாக்குமூலம் பதிவு செய்தேன். **அந்த புகார் வாக்குமூலம் அ.த.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின் நிலையம் சேர்ந்து அதன்தன்மைகேற்ப நிலைய குற்ற எண் 65/2022 சட்டப்பிரிவுகள் 294(பி), 323,506(1) IPC கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ 4 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** புகார் மனுவின் அசலை முதல் தகவல் அறிக்கையுடன் இணைத்து நீதிமன்றத்திற்கு அனுப்பிக்கொண்டேன்.

பின்னர் நானே வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்து கொண்டு சம்பவயிடம் சென்று 17.04.2022 12.00 மணிக்கு சம்பவயிடத்தை பார்வையிட்டு சாட்சிகள் வசந்தகுமார் மற்றும் சிபிவேந்தன் ஆகியோர் முன்னிலையில் பார்வை மகசர், மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ 5 மற்றும் அ.த.சா.ஆ 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்னர் சாட்சிகள் கனகராஜ், அகிலன், சுகுமார் மற்றும் மகசர் சாட்சிகள் ஆகியவர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். எதிரிகளை தேடிவந்த நிலையில் எதிரிகளை 18.04.2022 10.00 மணிக்கு அம்பலூர் பஸ்ஸ்டாப்பிடம் முறைப்படி கைது செய்து நிலையம் கொண்டு வந்து தக்க இருநபர் நிலைய ஜாமினில் விடுவித்துக்கொண்டேன். இவ்வழக்கில் காயம்பட்ட நபரான கனகராஜ் என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் திரு.டேவிட் விமல்குமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அவருக்கு ஏற்பட்ட காயம் சொற்ப காயம் என சான்றிதழ் பெற்றேன். **கனகராஜீன் விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று முறையே அ.த.சா.ஆ7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. அத்துடன் எனது புலன் விசாரணையை முடித்து எதிரிகள் மீது குற்றம் உண்மையென தெரியவந்ததால் எதிரிகள் மீது 294(பி), 323,506(1) IPC லிருந்து இவ்வழக்கின் சட்டப்பிரிவுகளை 294(பி), 323 IPC என பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்தேன். **பிரிவு மாறுதல் அறிக்கை அ.த.சா.ஆ 8 ஆக குறியீடு செய்யபப்படுகிறது**. அத்துடன் எனது புலன் விசாரணையை முடித்து இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். எனது விசாரணையில் சாட்சிகள் அனைவரும் பிரிவு 161(3) குவிமுச ன் படி வாக்குமூலத்தில் உள்ளதை போல் தான் சொன்னார்கள்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததில் இருந்து இறுதி அறிக்கை தாக்கல் செய்தது வரையிலான காலதாமதத்திற்காக ஏதும் சிறப்பு அறிக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். புகார்தாருக்கும் எதிரிகளுக்கும் இடையில் இருந்த பிரச்சனைக்குறித்து நான் விசாரித்து தெரிந்துக்கொள்ளவில்லை என்றால் சரியல்ல. நிலப்பிரச்சனை சம்மந்தமான ஆவணங்கள் குறித்து விசாரித்து தெரிந்துக்கொள்ளவில்லை என்றால் சரிதான். அ.சா.1 அவரது நீதிமன்ற சாட்சியத்தில் குறைந்த இரத்த

அழுத்ததின் காரணமாக தான் மயங்கிவிழுந்துவிட்டதாக கூறியுள்ளார்கள் என்றால் சரியல்ல. சம்பவயிடம் செல்லமால் சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் சாண்றாவணங்கள் அனைத்தையும் காவல்நிலையத்திலே வைத்து தாயரித்துக்கொண்டோம் என்றால் சரியல்ல. சொல்லும் நேரத்தில் சொல்லும் இடத்தில் எதிரிகளை கைது செய்யவில்லை என்றாலும் எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

சாட்சி கையொப்பம்
(ஓம்.) சம்பத்

SRIPATHI K

Digitally signed by SRIPATHI K